# தோத்திரத் திரட்டு



# லலிதா நவரத்ன மாலை

காப்பு

ஆக்கும் தொழில்ஐந் தரனாற்ற நலம்
பூக்கும் நகையாள் புவனேச் வரிபால்
சேர்க்கும் நவரத் தினமாலையினைக்
காக்கும் கனநாயகவா ரணமே

## வைரம்

1. கற்றும் தெளியார் காடே கதியாய்
கண்மூடி நெடுங்கண வானதவம்
பெற்றும் தெரியார் நிலையென் னில்அவம்
பெருகும் பிழையேன் பேசத் தகுமோ
பற்றும் வயிரப்படைவாள் வயிரப்
பகைவர்க் கெமனா களடுத்தவளே
வற்றா தஅருட்சுனையே வருவாய்
மாதா ஜெயஓம் லலிதாம்பிகையே.

## நீலம்

2. மூலக் கனலே சரணம் சரணம்
முடியா முதலே சரணம் சரணம்
கோலக் கிளியே சரணம் சரணம்
குன்றா தஒளிக் குவையே சரணம்
நீலத் திருமே னியிலே நினைவாய்
நினைவற் றெளியேன் நின்றேன் அருள்வாய்
வாலைக் குமரி வருவாய் வருவாய்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

## முத்து

3. முத்தேவரும்முத் தொழிலாற் றிடவே
முன்நின் றருளும் முதல்வீ சரணம்
வித்தே விளைவே சரணம் சரணம்
வேதாந் தநிவா ஸினியே சரணம்
தத்தேறிய நான் தனயன் தாய் நீ
சாகா தவரம் தரவே வருவாய்
மத்தேறுததித் தினைவாழ் வடையேன்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

## பவளம்

4. அந்திம யங்கிய வானவிதானம்
அன்னை நடம்செய்யும் ஆனந்த மேடை
சிந்தைநிறம்பவ ளம் பொழிபாரோ
தேம் பொழி லாமிகு செய்தவ ளாரோ
எந்தையி டத்தும்ம னத்தும் இருப்பாள்
எண்ணுபவர்க் கருள் எண்ண மிகுந்தாள்
மந்திர வேதம யப்பொரு ளானாள்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.

## மாணிக்கம்

5 காணக் கிடையாக் கதியானவளே
கருதக் கிடையாக் கலையா னவளே
பூணக் கிடையாப் பொலிவா னவளே
புனையக் கிடையாப் புதுமைத் தவளே
நாணித்திருநா மமும்நின் துதியும்
நவிலா தவரை நாடா தவளே
மாணிக் கஒளிக் கதிரே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.

## மரகதம்

6. மரகத வடிவே சரணம் சரணம்
மதுரித பதமே சரணம் சரணம்
சுரபதி பணியத் திகழ்வாய் சரணம்
சுதிஜதி லயமே சுவையே சரணம்
அரகர சிவஎன் றடியவர் குழும
அவரருள்பெறஅரு ளமுதே சரணம்
வரநவ நிதியே சரணம் சரணம்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே

## கோமேதகம்

7. பூமேவியநான் புரியும் செயல்கள்
பொன்றா துபயன் குன்றா வரமும்
தீமேல் இடினும் ஜெய சக்தி எனத்
திடமாய் அடியேன் மொழியும் திறமும்
கோமே தகமே குளிர்வான் நிலவே
குழல்வாய் மொழியே தருவாய் அருள்வாய்
மாமே ருவிலே வளர்கோ கிலமே
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே

## பதுமராகம்

8 ரஞ்சனி நந்தினி அங்கனி பதும
ராச விகாஸ வியாபினி அம்பா
சஞ்சல ரோகநி வாரணி வாணி
சாம்பவி சந்த்ர கலாதரி ராணி
அஞ்சன மேனி அலங்க் ருத பூரணி
அம்ருத ஸொருபிணி நித்ய கல்யாணி
மஞ்சுளமேரு சிருங்கநி வாஸினி
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே

## வைடூரியம்

9. வலையொத் தவினை கலையொத் தமனம்
மருளப் பறையா றொலியொத் தவிதால்
நிலையற் றெளியேன் முடியத் தகுமோ
நிகளம் துகளா கவரம் தருவாய்
அலைவற் றசைவற் றநுபூதி பெறும்
அடியார் முடிவாழ் வைடூரியமே
மலையத் துவசன் மகளே வருவாய்
மாதா ஜெயஓம் லலிதாம்பிகையே

## பயன்

எவர்எத் தினமும் இசைவாய் லலிதா
நவரத் தினமா லைநவின் றிடுவார்
அவர்அற் புதசக் திஎலாம் அடைவார்
சிவரத் தினமாய்த் திகழ் வாரவரே (மாதா ஜெய)



# சகலகலாவல்லிமாலை

(ராகம் - ராகமாலிகை)

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுன் டாக்கும் வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தா நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே சகல கலாவல்லியே 2

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவளங்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக் கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே 3

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலாவல்லியே 4

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந்தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்செந் நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலாவல்லியே 5

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகல கலாவல்லியே 6

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும்வெள் ளோதிமப் பேடே சகல கலாவல்லியே 7

சொல்விற் பனமு மவதான முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நளினாசனஞ்சேர்
செல்விக் கரிதன் றொருகால முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே 8

சொற்கும் பொருட்டு முயிராமெய்ஞ் ஞானத்தின்றோற்றமென்ன
நிற்கும் பிராமியென் னாவிலென் னோநின்றிலைபுழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே சகல கலாவல்லியே 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேம்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப்போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ சகல கலாவல்லியே. 10

குமரகுருபர சுவாமிகள்

# துக்க நிவாரண அஷ்டகம்

மங்கள் ரூபிணி மதிஅணி சூலினி
மன்மத பாணியளே!
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும்
சங்கரி சௌந்தரியே
கங்கண பாணியன் கனமுகங் கண்டநல்
கற்பகக் காமினியே
ஜெய ஜெய சங்கரி! கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

கான் உறுமலர் எனக் கதிர்ஒளி காட்டிக்
காத்திட வந்திடுவாள்
தான்உறு தவஒளி தார்ஒளி மதிஒளி
தாங்கியே வீசிடுவாள்
மான்உறு விழியாள் மாதவர் மொழியாள்
மாலைகள் சூடிடுவாள்
ஜெய ஜெய சங்கரி! கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

சங்கரி சௌந்தரி சதுர்முகன் போற்றிடச்
சபையினில் வந்தவளே
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப்
பொருந்திட வந்தவளே
எம்குலந் தழைத்திட எழில் வடிவுடனே
எழுந்தநல் துர்க்கையளே
ஜெய ஜெய சங்கரி! கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

தணதண தந்தண தவில் ஒலி முழங்கிடத்
தண்மணி நீ வருவாய்
கணகண கங்கண கதிர்ஒளி வீசிடக்
கண்மணி நீ வருவாய்
பணபண பம்பண பறைஒலி கூவிடப்
பண்மணி நீ வருவாய்
ஜெய ஜெய சங்கரி! கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

பஞ்சமி பைரவி பர்வத புத்திரி
பஞ்சநல் பாணியளே
கொஞ்சிடும் குமரனைக் குணம்மிகு வேழனைக்
கொடுத்தநல் குமரியளே
சங்கடம் தீர்த்திடச் சமர்அது செய்தநல்
சக்திஎனும் மாயே
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

எண்ணியபடியே அருளிட வருவாய்
எம்குல தேவியளே
பண்ணியசெயலின் பலனது நலமாய்ப்
பல்கிட அருளிடுவாய்
கண்ணொளி அதனால் கருணையே காட்டிக்
கவலைகள் தீர்ப்பவளே
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

இடர்தரு தொல்லை இனிமேல் இல்லை
என்றுநீ சொல்லிடுவாய்
சுடர்தரு அமுதே சுருதிகள் கூறிச்
சுகமது தந்திடுவாய்
படர்தரு இருளில் பரிதியாய் வந்து
பழவினை ஓட்டிடுவாய்
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

ஜெயஜெயபாலா சாமுண்டேஸ்வரி
ஜெயஜெய ஸ்ரீதேவி
ஜெயஜெய துர்க்கா ஸ்ரீபரமேஸ்வரி
ஜெயஜெய ஸ்ரீதேவி
ஜெயஜெய ஜெயந்தி மங்கள காளி
ஜெயஜெய ஸ்ரீதேவி
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

# ஆரத்தி

ஓம் ஜெய ஜெய ஜெய சக்தி - ஓம்ஸ்ரீ
ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய அனுதினம் பாடிப் பணிந்தோம்
ஜெகமெங்கும் அமைதியைத் தா
- ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவையெல்லாம் அடைய -
அம்மம்மா தேவையெல்லாம் மறைய
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பிலெம்மை - ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈஸ்வரி வரமருள்வாய் - அம்மம்மா ஈஸ்வரி வரமருள்வாய்
கரங்குவித்தோம் இனிக் காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய் - ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

காசினியெங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள்வாய் -
அம்மம்மா கருத்தினில் அன்பருள்வாய்
தேசுடன் வாழக் காட்டடி காட்சி
தேவியுன் அடைக்கலமே - ஓம் ஜெய ஜெய ஜெய சக்தி

நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து ஞான நல்லொளி தீபம் வைத்து
நமஸ்காரம் செய்து ஆரத்தி செய்தோம்
ஞாலத்திற் கமைதியைத் தா - ஓம் ஸ்ரீஜெய ஜெய ஜெய சக்தி



**JR PRINT**
***Specialist in Wedding Cards***
57 Boundary Road
London E17 8NQ
**Tel: 020 8503 6643**
**Fax: 020 8521 2365**

அச்சுப் பதிப்பு – ஜே.ஆர். பதிப்பகம் 0181 503 6643